செ. கு. எண்: 167 நாள் : 04.09.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 4.9.2014

ஜம்மு காஷ்மீர் மாநிலம், 41 ராஷ்டிரிய ரைப்பில்ஸ், 28 காலாட்படை (41 Rashtriya Rifles, 28 Infantry Division) பிரிவில் சிப்பாயாக பணி புரிந்து வந்த, திருவண்ணாமலை மாவட்டம், சு.கம்புப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ராயர் என்பவரின் மகன் ரஞ்சித் 2.9.2014 அன்று குப்வாரா மாவட்டத்தில் ஆப்ரேஷன் ரக்ஷா தொடர்பாக படை வீரர்களை ஒரு தளத்திலிருந்து மற்றொரு தளத்திற்கு இட மாற்றம் செய்யும் போது, வீரமரணம் எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

வீர மரணம் எய்திய திரு. ரஞ்சித் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீர மரணம் அடைந்த திரு. ரஞ்சித் அவர்களின் குடும்பத்திற்கு பத்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**